# சமஸ்கிருத நாடகங்களும் மூல நூல்களும் தசரூபகத்தை அடிப்படையாகக் கொண்ட சமகாலப் பார்வை – ஓர் ஆய்வு

ச. பத்மநாபன்[1*]

சம்ஸ்கிருத இலக்கிய மரபில் நாடகங்கள் திருஷ்ய காவியங்கள் எனப்படுகின்றன. இந் நாடகங்களுக்கு இலக்கண நூல்களாக நாட்டிய சாஸ்திரமும், தசரூபகமும் விளக்குகின்றன. சமஸ்கிருத நாடகத்தின் கரு, பாத்திரம், சுவை எனும் அம்சங்களுடன் நாடகத்தின் வகைகள் மற்றும் மேடை, பாத்திரங்களின் குணம்சங்கள், பேச்சு மொழி அவைக்குரிய பாடல் யாப்புக்கள், மேடையமைப்பு, பாத்திர ஒப்பனை, கதையின் வளர்ச்சி எனும் இன்னோரன்ன விடயங்கள் தொடர்புபெறுகின்றன. அந்நிலையில் சம்ஸ்கிருத காவியவியல் நூல்வரிசையில் பல நூல்கள் காணப்பட்டாலும், நாடக இலக்கியத்திற்கான இலக்கண நூலாக தனஞ்ஜயனின் தசரூபகம் முழுமைபெற்று விளங்குகின்றது என்பதையும் இவ்விலக்கண நூலே ஏனைய மொழிகளிலமைந்த நாடகவியல் நூல்களிற்கு அடிப்படையானது என்பதை இலக்கிய விவரண ஆய்வு முறையியல் மூலமாகவும், ஒப்பியல் ஆய்வு மூலமாகவும் இவ்வாய்வு கூறவிளைகின்றது. அதனடிப்படையில் தசரூபகத்தின் ஊடான நாடகமுறைமைகளும், நாடக எழுச்சிகளும் சமகாலத்தில் மேடை நாடகங்கள் எனும் தன்மை அருகி திரை நாடகங்களாக விளங்குகின்றன. எனினும்,நாடக இலக்கண இயல்புகளுக்கு ஏற்ற திறனுடன் கவர்ச்சிகரமானதும் ஜனரஞ்சாமானதுமான தன்மைக்கு தசரூபகத்தின் வகிபங்கு முக்கியத்துவமுடையதாகும் என்பதனை வலியுறுத்துவதாக இந்நூலின் உள்ளடக்கம் தெளிவுபெறுமாற்றை விளக்கமுறப்படுகின்றது.

*திறவுச்சொற்கள்: நாடகம், ரூபகம், நாட்யம், வஸ்து, நேதா, ரசம், காவியவியல்*

[1]சம்ஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப்பல்லைக்கழகம், இலங்கை.
padamanaban73@gmail.com